பக்கங்கள்: 07

காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆவணி 20 திங்கட்கிழமை 05.09.2022 கதிர் 191

## பரீட்சைகளுக்கான திகதிகள் அறிவிப்பு

2022ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மற்றும் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கள் எதிர்வரும் டிசம்பர் மாதம் ஆரம்பமாகும் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

அதன்படி, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை எதிர்வரும் டிசம்பர் 2

# கோட்டாவைக் கைது செய்ய முடியாது; அவரை நாங்கள் கைவிடவும் மாட்டோம்



## இப்படிக் கூறுகின்றார் அமைச்சர் பிரசன்ன

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாடு திரும்பியமைக்கு எதிராக எவரும் குரல் எழுப்ப முடியாது. அவரைக் கைது செய்யுமாறும் எவரும் அழுத்தம் கொடுக்கவும் முடியாது.

– இவ்வாறு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:– 2

## கோட்டாவுக்குப் பிரதமர் பதவியா? எந்தப் பேச்சும் நடைபெறவில்லை



### ஜனாதிபதி ஆலோசகர் விளக்கம்

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைப் பிரதமராக நியமிப்பது பற்றியோ, வேறு எந்தப் பதவியையும் வழங்கும் தொடர்பிலோ எந்தப் பேச்சும் நடைபெறவில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரும் ஜனாதிபதியின் ஆலோசகருமான ருவன் விஜேவர்தன தெரிவித்தார்.

கொழும்பில் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் 2

## பற்றி எரிந்துகொண்டிருக்கிறது நாடு; தீயை அணைக்க ஒன்றிணையுங்கள்

### கம்மன்பில அழைப்பு



எமது நாடு பற்றி எரிந்து கொண்டிருக்கின்றது. அந்தத் தீயை அணைக்க வேண்டிய பொறுப்பு எமக்கு உள்ளது. எனவே, எமது புதிய அரசியல் கூட்டணியில் இணையுமாறு அனைவருக்கும் அழைப்பு விடுக்கின்றோம்.

- இவ்வாறு புதிய ஹெல உறுமயவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரி வித்தார். விமல் வீரவன்ச தலைமையிலான 'மேலவை இலங்கை கூட்டணி'யின் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டு 2

## சர்வகட்சி அரசு தொடர்பில் சஜித்துடன் ஐ.தே.க. பேச்சு



அனைத்துக் கட்சி அரசை அமைப்பது தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுடன் ஐக்கிய தேசியக் கட்சி பேச்சு நடத்துகின்றது என்று அக் கட்சியின் பிரதித் தலைவரும் ஜனாதிபதியின் ஆலோசகருமான 2

## மனைவியைக் கழுத்தறுத்து படுகொலைசெய்த கணவன்

கணவன் தனது மனைவியை கழுத்தறுத்துப் படுகொலை செய்துள்ளார்.

இந்தக் கொடூர சம்பவம் தம்புள்ளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொட்டவெல பிரதேசத்தில் நேற்றிரவு இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு இன்று தெரிவித்துள்ளது.

கொட்டவெல பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயதான கீதா குமாரி கருணாதிலக என்பவரே 2

## லிட்ரோ எரிவாயு விலை குறைப்பு



லிட்ரோ சமையல் எரிவாயு விலை இன்று நள்ளிரவு முதல் குறைக்கப்படவுள்ளது என அந்நிறுவனத்தின் தலைவர் முதித்த பீரிஸ அறிவித்துள்ளார்.

அதற்கமைய, அதற்கமைய, லிட்ரோ 12.5 கிலோ எரிவாயு கொள்கலன் விலை 113 ரூபாவாலும், 5 கிலோவின் விலை 45 ரூபாவாலும், 2.3 கிலோ சமையல் எரிவாயுவின் 2

## இலங்கை ராஜபக்ஷக்களுக்கு எழுதிவைத்த சொத்து அல்ல



### விமல் கடும் சீற்றம்

குடும்ப ஆட்சியின் பின்னால் அணிதிரண்டது போதும், பாரம்பரிய அரசியல் கலாசாரம் முடிவுக்கு வரட்டும். புதியதொரு அரசியல் கலாசாரத்தை ஏற்படுத்தி நாட்டை மீட்கவே 'மேலவை இலங்கை கூட்டணி' உதயமாகியுள்ளது.


- இவ்வாறு 'மேலவை இலங்கை கூட்டணி' மற்றும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச 2

## சட்டக் கல்லூரிக்கான விண்ணப்பம் கோரல்




இலங்கை சட்டக் கல்லூரிக்குப் பிரவேசிப்பதற்கான பொது நுழைவுப் பரீட்சைக்குத் தகுதியானவர்களிடம் இருந்து 2

## ரணிலுக்கு விக்கி கடிதம்



வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளராக மருத்துவர் திலிப் லியனகே நியமிக்கப்பட்டதை மீள் பரிசீலனை செய்யுமாறு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி. விக்னேஸ்வரன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அவசர கடிதம் அனுப்பியுள்ளார். 2

## கனடாவில் பயங்கரம்

## அடுத்தடுத்து கத்திக்குத்து தாக்குதல் 10 பேர் பரிதாபச் சாவு; 15 பேர் காயம்



### பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ இரங்கல்

கனடாவில் நடந்த கத்திக்குத்துச் சம்பவம் கொடூரமானது மற்றும் இதயத்தை உடைக்கும் சம்பவம் என்று கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கவலை தெரிவித்துள்ளார்.

கனடா நாட்டின் சஸ்கட்சாவான் மாகாணத்தின் பல்வேறு பகுதிகளில் தொடர்ச்சியாக 2

## 11ஆவது மாடியிலிருந்து வீழ்ந்து ஒருவர் மரணம்!

### வெள்ளவத்தையில் சோகம்

கொழும்பு, வெள்ளவத்தை - மாயா ஒழுங்கைப் பகுதியில் மாடிக் கட்டடம் ஒன்றில் இருந்து தவறி விழுந்து ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளார். குறித்த நபர் 12 மாடிகளைக் கொண்ட 2

## சட்டக் கல்லூரி......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
விண்ணப்பங்கள் எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் கோரப்படவுள்ளது.

இதற்கான விண்ணப்பங்கள், அடுத்த மாதம் (ஒக்டோபர்) 16 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும் என்று இலங்கை சட்டக் கல்லூரி தெரிவித்துள்ளது.

இதன்படி, விண்ணப்பப்படிவம் மற்றும் வழிமுறைகள் இலங்கை சட்டக் கல்லூரியின் இணையத்தளத்தில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## பரீட்சை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
4ஆம் திகதி நடைபெறவுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், டிசம்பர் 5 ஆம் திகதி ஆரம்பமாகும் உயர்தரப் பரீட்சைகள் 2023ஆம் ஆண்டு ஜனவரி முதல் வாரம் வரை நடைபெறும் என்றும் பரீட்சைகள் ஆணையாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## கனடாவில்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அடுத்தடுத்து கத்திக்குத்து தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அம்மாகாணத்தின் ரஜினா நகரில் உள்ள ஜேம்ஸ் ஸ்மித் சீர் நேசன், வெல்டன், சஸ்கடன் ஆகிய பகுதிகளில் அடுத்தடுத்து கத்திக்குத்து தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தக் கத்திக்குத்துத் தாக்குதலில் 10 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும், 15 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

கனடியன் கால்பந்து லீக் போட்டிகள் ரஜினா நகரில் நடைபெற்று வரும் நிலையில் இந்தத் தாக்குதல் நடத்தியது யார்? தாக்குதலுக்கான பின்னணி என்ன? என்பவை குறித்து பொலிஸார் தீவிர விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

இந்தத் தொடர் கத்திக்குத்துத் தாக்குதலில் தொடர்பு இருக்கலாம் எனச் சந்தேகம் எழுந்துள்ளதால் டமியன் சண்டர்சன், மைலஸ் சண்டர்சன் ஆகிய இருவரைப் பொலிஸார் தீவிரமாகத் தேடி வருகின்றனர்.

கனடாவில் அடுத்தடுத்து கத்திக்குத்து நடத்தப்பட்டு 10 பேர் பலியான சம்பவம் அந்நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்தக் கொடூர சம்பவம் பற்றி கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ வெளியிட்டருவிட்டர் பதிவில்,

சஸ்காட்செவனில் நடந்த தாக்குதல்கள் கொடூரமானவை மற்றும் இதயத்தை உடைப்பவை. தங்களை நேசிப்பவரை இழந்து தவிப்பவர்கள் மற்றும் காயமடைந்தவர்களைப் பற்றி நான் நினைத்துப் பார்க்கின்றேன் - என்று அவர் பதிவிட்டுள்ளார்.

## கோட்டாவை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதி பதவியிலிருந்து விலகி வீடு செல்லுமாறே ஆர்ப்பாட்டக்காரர்கள் அன்று கோரினர். அவரை நாட்டைவிட்டு வெளியேறுமாறோ அல்லது வெளிநாட்டில் தங்குமாறோ எவரும் கோரவில்லை.

அவருக்கென சொந்த நாடு இருக்கும்போது அவர் ஏன் நாட்டைவிட்டு வெளியேற வேண்டும்? எமது கோரிக்கையின் பிரகாரம் அவர் நாடு திரும்பியுள்ளார்.

அவருக்கு முன்னாள் ஜனாதிபதிக்குரிய அனைத்துச் சலுகைகளையும் எமது அரசு வழங்குகின்றது. அவர் இந்நாட்டில் சுதந்திரமாக நடமாட முடியும். போதிய பாதுகாப்பு வசதிகளையும் அவருக்கு அரசு வழங்கும்.

மீண்டும் அரசியலுக்கு வர அவர் இணக்கம் தெரிவித்தால் அவரை முதலில் தேசியப்பட்டியல் ஊடாக நாடாளுமன்ற உறுப்பினராக்குவோம்.

மக்களின் அமோக ஆணை பெற்று ஜனாதிபதியாகப் பதவி வகித்த கோட்டாபய ராஜபக்ஷவை அரசு என்ற ரீதியில் நாம் ஒருபோதும் கைவிடமாட்டோம் - என்றார்.

## கோட்டாவுக்கு......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தெரிவிக்கையில், கோட்டாபய ராஜபக்ஷ தொடர்பாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் எந்த ஒப்பந்தமும் இல்லை.

தான் அரசியலில் நீடிப்பதா? இல்லையா? என்பதை கோட்டாபய இன்னும் தீர்மானிக்கவில்லை.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பரிந்துரையின் பேரில், கோட்டாபய ராஜபஷ மீண்டும் இலங்கைக்கு வர அனுமதிக்கப்பட்டுள்ளதோடு அவருக்குப் பாதுகாப்பும் வழங்கப்பட்டுள்ளது - என்றார்.

## சர்வகட்சி......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ருவன் விஜேவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

ஐக்கிய மக்கள் சக்தி மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் அணி சேர்வதற்கான கதவுகள் திறந்தே உள்ளன.

நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்கவும், துன்பங்களிலிருந்து மக்களை விடுவிக்கவும் அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைவது அவசியம் - என்றார்.

## இலங்கை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
இலங்கை என்பது ராஜபக்சக்களுக்கோ அல்லது பண்டாரநாயக்களுக்கோ எழுதி வைக்கப்பட்ட சொத்து அல்ல. அது மக்களுக்கானது. ஆட்சியும் மக்களுக்குரியதாகவே இருக்க வேண்டும். ஆனால், கடந்த காலங்களில் மக்கள் ஆணைக்கு புறம்பாக நடவடிக்கைகள் இடம்பெற்றன. அமைச்சரவையில் இருந்து நாம் சுட்டிக்காட்டினோம். அதன் பலனாக வெளியேற்றப்பட்டோம்.

வாக்குகள் பெற்று ஆட்சிபீடம் ஏறும் வரைதான் பங்காளிக் கட்சிகள் வேண்டும். இந்த அரசியல் கலாசாரத்துக்கு முடிவு கட்ட வேண்டும்.

எமது கூட்டணியில் பெரிய கட்சி, சிறிய கட்சி இணைந்தால்கூட சம அந்தஸ்தே வழங்கப்படும்.

பாரம்பரியக் கூட்டணிக் கலாசாரத்துக்கு முடிவு கட்ட வேண்டும். நாட்டுக்காக, மக்களுக்காக புதியதொரு கூட்டணி அரசியல் கலாசாரத்தை நாம் உருவாக்கியுள்ளோம். இதில் உள்ள தலைவர்கள், மதிநுட்பத்துடன் செயற்படக்கூடியவர்கள்.

அதேவேளை, ஐரோப்பாவிடமிருந்த பலம் ஆசியா பக்கம் சாய்கின்றது. எனவே, தேசிய ரீதியில் மட்டுமல்ல ஆசிய சக்திகளுடன் நிற்கும் வகையிலும் எமது நடவடிக்கை அமையும் - என்றார்.

## பற்றி எரிந்து......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலகம் முழுவதும் கையேந்துவதே கொள்கைத் திட்டமாக உள்ளது. நாட்டை மீட்பதற்கான திட்டம் ஆளும் கட்சியிடமோ அல்லது எதிர்க்கட்சியிடமோ இல்லை. அதனால்தான் புதிய கூட்டணியை உருவாக்கியுள்ளோம்.

அழுத்தக் குழுவாக நாம் செயற்படுவோம். பிரச்சினைகளை பற்றி பேசுவதில் பயன் இல்லை, தீர்வுகளை பற்றி கதைக்கவே இந்தக் கூட்டணி.

சக்கரை நோயால் பாதிக்கப்பட்டவர், சக்கரைப் பழக்கத்தை கைவிடாமல், அதனை தொடர்ச்சியாக சாப்பிட்டால் என்ன நடக்கும்? அதுபோலவே கடன் பொறிக்குள் இருந்து மீள்வதற்காக மீண்டும் மீண்டும் கடன் வாங்கும் நடவடிக்கையையே ஆட்சியாளர்கள் முன்னெடுத்து வருகின்றனர் - என்றார்.

## லிற்றோ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
விலை 21 ரூபாவாலும் குறைக்கப்படவுள்ளதுஎனவும் அவர் தெரிவித்துள்ளார்.

உலக சந்தையின் சமையல் எரிவாயு விலையைக் கருத்தில்கொண்டு விலைச் சூத்திரத்துக்கு அமைய, இலங்கையிலும் சமையல் எரிவாயுவின் விலையைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி, 12.5 கிலோ சமையல் எரிவாயு கொள்கலனின் புதிய விலை 4,551 ரூபாவாகவும், 5 கிலோ சமையல் எரிவாயு கொள்கலனின புதிய விலை 1,827 ரூபாவாகவும், 2.3 கிலோ சமையல் எரிவாயுவின் புதிய விலை 848 ரூபாவாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## ரணிலுக்கு......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பதவிக்கு வடக்கு மாகாணத்தில் தகுதியானவர்கள் இருக்கும் நிலையில் வெளிமாகாணங்களில் இருந்து நியமிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று அந்தக் கடிதத்தில் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தகுதியான சுகாதாரப் பணிப்பாளர் ஒருவரை வடக்கில் இருந்தே தெரிவு செய்யுமாறு அவர் தனது கடிதத்தில் குறிப்பிடுள்ளதுடன் வழங்கப்பட்ட நியமனத்தை மீள் பரிசீலனை செய்யுமாறும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

## 11ஆவது......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கட்டடம் ஒன்றின் 11 ஆவது மாடியைச் சுத்தம் செய்யும்போது, யன்னல் ஊடாக கீழே விழுந்து உயிரிழந்துள்ளார் என்று ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

கிருலப்பனைப் பகுதியைச் சேர்ந்த 46 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் வெள்ளவத்தைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## மனைவியை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உயிரிழந்துள்ளார். குறித்த பெண் கடந்த 31ஆம் திகதி வெளிநாட்டில் இருந்து நாடு திரும்பி தாய் வீட்டில் இருந்தபோது கணவனால் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இருவருக்கும் இடையில் நீண்டகாலமாக நிலவி வந்த குடும்பத் தகராறு காரணமாக இந்தக் கொலை இடம்பெற்றுள்ளது என்று தம்புள்ளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் இடம்பெற்ற இடத்தில் சடலம் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்த நிலையில் நீதிவான் விசாரணை இன்று காலை இடம்பெற்றது.

கொலையைச் செய்த சந்தேகநபர் தற்போது பிரதேசத்தை விட்டு தப்பிச் சென்றுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைத் தம்புள்ளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.










நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## மீளெழுச்சிக்கு முட்டுக்கட்டை

பொருளாதார நெருக்கடியில் சிக்கி, சின்னாபின்னமாகிக் கிடக்கும் இலங்கை தேசத்தை, பிணை எடுக்கும் சர்வதேச நாணய நிதியத்தின் உதவித்திட்டத் தேர் மெல்ல முன்னோக்கி நகரும் என்ற நம்பிக்கை பிறந்திருக்கிறது.

சர்வதேச நாணய நிதியத்தின் அலுவலர் மட்டத் தரப்பினருக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு இணக்கம் இது விடயத்தில் நல்ல முன்னேற்றமே.

இந்தப் புரிந்துணர்வின் அடிப்படையில் இலங்கைக்கு முதல் கட்ட கடன் முற்கொடுப்பனவாக 2.9 பில்லியன் டொலர்களை நான்கு ஆண்டு காலத்துக்கு தவணைகளாகப் பிரித்து வழங்குவதற்கு சர்வதேச நாணய நிதியம் பூர்வாங்க அங்கீகாரம் வழங்கியிருக்கிறது.

சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான உதவித் திட்டத் தேர் தேர் நகரத் தொடங்கிவிட்டது என்பதற்கான ஆரம்ப சமிக்ஞைதான் இது.

இவ்வளவு தூரம் இலங்கையுடன் நெருங்கி, ஊடாடி, உதவ முன் வந்திருக்கும் சர்வதேச நாணய நிதியம் தனது உதவிகள் தொடர்பில் இலங்கைக்கு சில முக்கிய முன்நிபந்தனைகளை விதிக்கவும் தவறவில்லை.

இலங்கை தனக்கு கடன் வழங்கிய நாடுகளுக்குக் கடன் மீளளிப்பை கடந்த ஏப்ரல் மாதம் முதல் நிறுத்திவிட்டது. அதனால் கடனிறுக்க முடியாத நாடுகளின் பட்டியலில் அது சேர்த்துக் கொள்ளப்பட்டு விட்டது.

கடன் வழங்கிய நாடுகளுடன் பேசி, கடன் தவணைக் கொடுப்பனவுகள் தொடர்பில் சாத்தியமான ஒரு மறுசீரமைப்புத் திட்டத்திற்கு அவற்றை இணங்கச் செய்து, சம்மதிக்க வைப்பது இலங்கையின் பொறுப்பு என்று சர்வதேச நாணய நிதியம் கூறிவிட்டது.

அந்த முயற்சியை கடன் வழங்கிய நாடுகளுடன் இலங்கை ஏற்கனவே ஆரம்பித்துள்ளது.

இப்படிக் கடன் மீளளிப்புச் செய்ய முடியாது தடுமாறும் வறிய நாடுகளை ஆற்றுப்படுத்தி, வலுப்படுத்தி, வழிப்படுத்தி கடன் மீள் செலுத்துகைக்கான இலகு திட்டம் ஒன்றை ஒழுங்குபடுத்தி அளிப்பதில் ‘கிளப் டி பாரிஸ்’ (பாரிஸ் கழகம்) முக்கிய இடம் வகிக்கிறது. சர்வதேச நாணய நிதியத்துக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் பூர்வாங்க இணக்கம் ஏற்பட்டிருக்கின்றமை சாதகமான அம்சம் என பாரிஸ் கழகம் மெச்சுகின்றது: வரவேற்கின்றது.

ஆக அந்த அமைப்பும் இலங்கையின் பொருளாதார மீள் எழுச்சிக்கு உதவ பின்னிற்காது என்பது திண்ணம்.

மேற்படி பாரிஸ் கழகத்தில் ஆஸ்திரேலியா, கனடா பிரான்ஸ், ஜேர்மனி, ஜப்பான், நெதர்லலாந்து, ரஷ்யா, ஸ்பெயின், ஸ்வீடன், சுவிஸ், பிரிட்டன், அமெரிக்கா உள்ளிட்ட 22 நாடுகள் அங்கத்துவம் பெறுகின்றன. இதில் இந்தியா இந்த அமைப்பில் பார்வையாளர் அந்தஸ்து பெற்றுள்ளது. சீனா அதிலில்லை.

இலங்கைக்குக் கடன் வழங்கிய தரப்புகளில் முக்கியமான நாடுகள் மூன்று. சீனா, ஜப்பான், இந்தியா.

பின்னது இரண்டும் கடன் மீளளிப்புக்கான மறுசீரமைப்புக்குத் தாராளமாக விட்டுக் கொடுத்து உதவும் என்பது நிச்சயம். அவை அங்கத்துவம் பெறும் பாரிஸ் கழகமும் அதற்கு வழி சேர்த்து உதவும்.

‘கடன் பட்டார் நெஞ்சம் போல’ இலங்கை கலங்குகின்ற கடனில் அரைவாசிக்கு மேல் சீனாவினுடையது. மீளளிப்புக்கான மறுசீரமைப்புக்கு அதை இணங்கப் பண்ணுவது எப்படி என்பதுதான் கேள்வி.

தன்னுடைய புவியியல் கேந்திர முக்கியத்துவ விவகாரங்களுக்காக குட்டிநாடான இலங்கையை தளமாகப் பயன்படுத்த எத்தனிக்கும் சீனா, இந்தக் கடன் விவகாரத்தையும் எப்படியும் சிக்கலாக்கி, மாட்ட வைத்து, இலங்கையை சில்லெடுக்கும் என்பது முக்கியம்.

ரணில் அரசு அதை எப்படி தந்திரோபாயமாகச் சமாளிக்க போகின்றது என்பதில்தான் நாட்டின் மீளெழுச்சியின் வாய்ப்புத் தங்கி உள்ளது.

# பொலிஸ், நீதித்துறை இல்லாமல் சட்டத்தின் ஆட்சி நாட்டில் இல்லை



### ஜனாதிபதி திட்டவட்டக் கருத்து

ஒரு ஜனநாயக நாட்டில் பொலிஸும் சுயாதீன நீதித்துறையும் இல்லாவிட்டால் அது சட்டத்தின் ஆட்சியே கிடையாது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த நாட்டில் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கு அடிப்படை சட்டமான அரசமைப்பு பாதுகாக்கப்பட வேண்டும் என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

பம்பலப்பிட்டி பொலிஸ் களப்படை தலைமையகத்தில் இடம்பெற்ற 156 ஆவது பொலிஸ் தின விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அரசு என்ற இயந்திரத்தில் பொலிஸும் நீதித்துறையும் முக்கியமானவை என சுட்டிக்காட்டிய அவர் இவ்விரண்டையும் பாதுகாக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# புதிய அமைச்சரவையில் பெண்களுக்கு முன்னுரிமை!



### பிரதமர் அறிவிப்பு

புதிய அமைச்சரவையை நியமிக்கும் போது பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு பெண்ணொருவரிடம் ஒப்படைக்கப்பட வேண்டுமென பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அண்மையில் இடம்பெற்ற ஆளும் கட்சி கூட்டத்தின் போதே பிரதமர் தினேஸ் குணவர்தன இந்த தகவல்களை தெரித்துள்ளார்.

இதேவேளை பெண்கள் மற்றும் குழந்தைகளின் தேவைகள் தொடர்பாக நடைமுறை புரிதல் இல்லாத ஆண்களுக்கு இந்த அமைச்சை ஒதுக்குவது அர்த்தமற்ற செயல் என சுட்டிக்காட்டிய பிரதமர், பெண்களின்பிரதிநிதித்துவத்தை பேணவேண்டியதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தியுள்ளார்.

# வருமான வரி, சுங்க திணைக்களத்தின் 600 பேரை பின் தொடரும் உளவுத் துறை

கோடீஸ்வர வர்த்தகர்களுக்கும், தமக்கு நெருக்கமானோருக்கும் வரி செலுத்துவதிலிருந்து தப்பிக்க உதவி செய்வதாகக் கூறப்படும் சுங்கம் மற்றும் வருமான வரி திணைக்களத்தின் அதிகாரிகள் தொடர்பில் உளவுப் பிரிவு சிறப்பு அறிக்கையொன்றை அரசாங்கத்துக்கு வழங்கியுள்ளது.

சுமார் 600 அதிகாரிகள் தொடர்பில் இவ்வாறு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும், அவர்கள் தொடர்பில் மேலும் அவதானம் செலுத்தி மேலதிக விடயங்களை அறிவிக்க ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாகவும் அரசாங்கத்தின் தகவல்கள் தெரிவித்தன.

சுங்கத் திணைக்களம் மற்றும் வருமான வரித் திணைக்களம் ஆகியவற்றால் வசூலிக்க முடியுமான சுமார் 10 ஆயிரம் கோடி ரூபா வருமானம், அந்தத் திணைக்களத்தின் அதிகாரிகளின் மோசடி மற்றும் கவனக் குறைவுகளால் அரசாங்கத்துக்கு இல்லாமல் போவதாக அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இவ்வாறான நிலையிலேயே சுமார் 600 அதிகாரிகள் தொடர்பாக உளவுத் துறை அர சாங்கத்துக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான நிலையில், அரசாங்கம், அரசின் வருமானத்தை முகாமைத்துவம் செய்ய, வருமான முகாமைத்துவ நிறுவனம் ஒன்றை அமைப்பது தொடர்பில் ஆலோசித்து வருகின்றது.

# பிரசன்னவின் அமைச்சில் ஊழல் கணக்காய்வு செய்யப் பணிப்பு!

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் உள்ள அனைத்து நிறுவனங்களையும் கணக்காய்வு செய்ய அமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. அமைச்சில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போதே அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இந்த பணிப்புரையை விடுத்துள்ளார். மேற்படி அமைச்சின் கீழ் உள்ள 21 நிறுவனங்களில் இடம்பெற்றன எனக் கூறப்படும் முறைகேடுகள் தொடர்பான முறைப்பாடுகள் கிடைத்தமையே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. சில குற்றச்சாட்டுகள் தொடர்பாக ஏற்கனவே சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள அதேவேளை சில வழக்குகள் விசாரணையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பயங்கரவாத விசாரணைப் பிரிவுக்கு மட்டக்களப்பில் இருவர் அழைப்பு






இலங்கை தமிழரசு கட்சி மட்டக்களப்பு மாவட்ட மகளிர் அணி உறுப்பினர் கந்தையா கலைவாணி மற்றும் ஊடகவியலாளர் நிலாந்தன் ஆகிய இருவருக்கும் பயங்கர விசாரணைப் பிரிவி னரால் நடத்தப்படும் விசாரணை ஒன்றுக்கு வாக்குமூலம் ஒன்றைப் பெறுவதற்காக முறையே வரும் 12 மற்றும் 14 ஆம் திகதிகளில் கொழும்பு-05 கிருல்ப்பனை நாரேஹன்பிட்டியில் அமைந்துள்ள பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப்பிரிவுக்கு வருமாறு தனித்தனி அழைப்பு விடுக்கப்பட் டுள்ளது.

இவர்களுக்கான அழைப்புக் கடிதங்கள் நேற்று முன்தினம் பிற்பகல் மட்டக்களப்பு ஆறுமுகத்தான் குடியிருப்பு, செங்கலடி ஆகிய பிரதேசத்தில் அவர்களின் வீட்டிற்கு சென்ற மட்டக்களப்பு பொலிஸ் புலனாய்வு அதிகாரிகளினால் அவர்களது குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு
திங்கட்கிழமை 05.09.2022

# இந்த ஆண்டின் மிக உக்கிரப் புயல் கிழக்குச் சீனக் கடலில் நகருகிறது







டோக்கியோ, செப்.05

உலக அளவில் இந்த ஆண்டின் மிகப் பெரிய கிழக்கு சீனக் கடலில் ஹின்னம்னோர் புயல் உருவாகியுள்ளது. ஹின்னம்னோர் புயல் படிப்படியாக வடக்கு நோக்கி கிழக்கு சீனக் கடலில் நகரும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இந்த சக்தி வாய்ந்த ஹின்னம்னோர் புயல் சீனாவின் அண்டை நாடுகளான தைவான், ஜப்பான் மற்றும் கொரியாவையும் பாதிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சீனாவின் தேசிய வானிலை மையம் நேற்றுக் காலை 10 மணிக்கு மஞ்சள் அலெர்ட் புயல் எச்சரிக்கையை வெளியிட்டது. வடகிழக்கு ஜெஜியாங், ஷாங்காய் மற்றும் தைவானில் கனமழை பெய்யும் என சீனாவின் தேசிய வானிலை மையம் எச்சரித்துள்ளது.

கப்பல்கள் துறைமுகத்திற்குத் திரும்பும்படி எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. இதனால் முன்னெச்சரிக்கையாக கிழக்கு சீனாவில் உள்ள நகரங்கள் படகு சேவையை நிறுத்தி வைத்துள்ளன. கிழக்கு சீனாவில் உள்ள நகரங்கள் வென்ஜோவ், ஷாங்காய் நகரில் மீட்புப் பணிகளில் ஐம்பதினாராயிரத்துக்கும் மேற்பட்ட பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அனைத்து பள்ளிகளும் மூடப்பட்டுள்ளன.

ஹொங்கொங் வானிலை ஆய்வகத்தின் படி, இந்த சூறாவளியால்

மணிக்கு அதிகபட்சமாக 175 கிமீ (109 மைல்) வேகத்தில் காற்று வீசும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

ஜப்பானின் ஒகினாவாவில் விமானங்களை ரத்து செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும் இந்த புயலால் கொரிய தீபகற்பத்தில் கனமழை பெய்யும் என்றும், இதனால் வெள்ளப்பெருக்கு ஏற்படும் அபாயம் உள்ளது என்று கணிக்கப்பட்டுள்ளது.

தைவானில், நியூ தைபே, தாயுவான் மற்றும் சிஞ்சு மாவட்டங்களில் வசிக்கும் 600க்கும் மேற்பட்டோர் அருகிலுள்ள தங்குமிடங்களுக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

இந்த புயலால் தைவானின் மியோலி மாவட்டத்தில் கடும் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது, மேலும் சுமார் 100 சாலையோர மரங்கள் வேரோடு சாய்ந்துள்ளன. கனமழை பெய்து வருகிறது. அந்நாட்டு போக்கு வரத்து மற்றும் தொடர்பு அமைச்சகத்தின் படி, தைவான் முழுவதும் சுமார் 40 விமானங்கள் மற்றும் 100 க்கும் மேற்பட்ட படகு சேவைகளும் சனிக்கிழமை ரத்து செய்யப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது.

# சோமாலியாவில் பயங்கரவாதிகள் 8 வாகனங்களுக்குத் தீயிட்டனர்!

## அப்பாவிகள் 19 பேர் உடல் கருகிப் பலி



சோமாலியாவில் சாலையில் சென்ற வாகனங்களை நிறுத்தி தீ வைத்து பயங்கரவாதிகள் எரித்தனர். அந்த வாகனங்களில் பயணம் செய்த பெண்கள், சிறுவர்கள் உள்பட 19 பேர் உடல் கருகி பரிதாபமாக உயிரிழந்தனர்.

சோமாலியாவில் அல் கொய்தா ஆதரவு பெற்ற அல் பாப் பயங்கரவாதிகள் கடும் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். பொலீஸார், இராணுவ வீரர்கள் மற்றும் அரசு அதிகாரிகளைக் குறிவைத்து தாக்குதல்களை நடத்தி வரும் இவர்கள் மக்கள் அதிகம் கூடும் இடங்களில் குண்டுவெடிப்பு மற்றும் துப்பாக்கிச்சூடு நடத்தி அப்பாவி மக்களையும் கொன்று குவித்து வருகின்றனர்.

இந்த நிலையில் சோமாலியாவின் மத்திய பகுதியில் உள்ள ஹிரான் மாகாணத்தில் பெலெட்வேய்ன் மற்றும் மாக்சாஸ் நகரங்களுக்கு இடையே உள்ள சாலையில் வாகனங்கள் பல சென்று கொண்டிருந்தன. அப்போது அங்கு வந்த அல் பாப் பயங்கரவாதிகள் அந்த வாகனங்களைத் தடுத்து நிறுத்தி தீ வைத்தனர்.


இப்படி கார், லொறி உள்பட 8 வாகனங்களை தீ வைத்து விட்டு பயங்கரவாதிகள் தப்பி ஓடினர். இதில் 8 வாகனங்களும் முழுவதுமாக தீயில் கருகி உருக்குலைந்து போயின.

இந்தக் கோர சம்பவத்தில் அந்த வாகனங்களில் பயணம் செய்த பெண்கள், சிறுவர்கள் உள்பட 19 பேர் உடல்கருகி பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் பலர் பலத்த தீக்காயம் அடைந்தனர்.

அவர்கள் அனைவரும் உடனடியாக மீட்கப்பட்டு சிகிச்சைக்காக ஆஸ்பத்திரிகளில் சேர்க்கப்பட்டனர்.

அவர்களில் சிலரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால் பலி எண்ணிக்கை மேலும் உயரும் என அஞ்சப்படுகிறது.





# ரஷ்ய எரிமலையில் இருந்து விழுந்து அறுவர் உயிரிழப்பு

ரஷ்யாவில் எரிமலையில் ஏறி கொண்டிருந்த மலையேற்ற வீரர்கள் 6 பேர் 13 ஆயிரம் அடி உயரத்தில் இருந்து விழுந்து உயிரிழந்தனர்.

ரஷ்யாவின் கிழக்கு பகுதியில் உள்ள காம்சட்கா தீபகற்பத்தில் குளுச்செவ்ஸ்கயா சோப்கா என்கிற மிகப்பெரிய எரிமலை ஒன்று உள்ளது. 15,884 அடி உயரம் கொண்ட இந்த எரிமலை யூரேசியாவின் மிக உயரமான எரிமலையாக அறியப்படுகிறது. மேலும் இது ரஷியா மற்றும் பிறநாடுகளை சேர்ந்த மலையேற்ற வீரர்களிடம் புகழ்பெற்ற மலைச்சிகரமாகவும் உள்ளது.

உள்நாட்டை சேர்ந்த 10 மலையேற்ற வீரர்கள் மற்றும் 2 வழிகாட்டிகள் கடந்த 30 ஆம் திகதி குளுச்செவ்ஸ்கயா சோப்கா எரிமலையில் மலையேறும் பயிற்சியை தொடங்கினர்.

4 நாள்களுக்குப் பிறகு நேற்று முன்தினம் அவர்கள் மலையின் 10,827 அடி உயரத்தை அடைந்தனர். அதை தொடர்ந்து அங்கு அவர்கள் முகாம் அமைத்து ஓய்வு எடுத்தனர். பின்னர் அந்த 12 மலையேற்ற வீரர்களில் 9 பேர் மலைச்சிகரத்தை அடைய தொடர்ந்து மலையேற தொடங்கினர். 3 பேர் மட்டும் முகாமில் இருந்தனர். இந்த நிலையில் அந்த மலையேற்ற வீரர்கள் 13,000 அடி உயரத்தில் ஏறி கொண்டிருந்தபோது சற்றும் எதிர்பாராத விதமாக அவர்களில் 4 பேர் திடீரென கீழே விழுந்தனர். இதைக்கண்டு சக மலையேற்ற வீரர்கள் அதிர்ச்சியில் உறைந்த நிலையில், அடுத்த சில நிமிடங்களில் மேலும் 2 மலையேற்ற வீரர்கள் கீழே விழுந்தனர். 13,000 அடி உயரத்தில் இருந்து விழுந்ததில் மலையேற்ற வீரர்கள் 6 பேரும் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். இதுபற்றிய தகவல் கிடைத்ததும் மீட்பு குழுவினர் உடனடியாக ஹெலிக்கொப்டரில் சம்பவ இடத்துக்குப் புறப்பட்டனர். ஆனால் மோசமான வானிலையின் காரணமாக மீட்பு குழுவால் உடனடியாக அங்கு செல்லமுடியவில்லை.

இதனால் எரிமலையில் 10,827 அடி உயரத்திலும், 13,000 அடி உயரத்திலும் சிக்கி இருக்கும் 6 மலையேற்ற வீரர்களை மீட்பதில் சிக்கல் நீடிக்கிறது. எனினும் அவர்களைப் பத்திரமாக மீட்கும் முயற்சியில் மீட்பு குழுவினர் முழு வீச்சில் ஈடுபட்டுள்ளனர்.

# புதிய கட்சி தொடங்கினார் குலாம் நபி ஆசாத் பெயர்,கொடியை மக்கள் தெரிவதற்கு அழைப்பு





ஜம்மு,செப்.05'

காங்கிரஸில் இருந்து சமீபத்தில் விலகிய மூத்த தலைவர் குலாம் நபி ஆசாத், (வயது73) தன் அடுத்த கட்ட அரசியல் நகர்வுகளை வேகப்படுத்தி உள்ளார்.

திய கட்சியை துவக்குவதாக அறிவித்துள்ள அவர், அதற்கான பெயர் மற்றும் கொடியை மக்கள் தேர்ந் தெடுக்க அழைப்பு விடுத்துள்ளார்.

ஜம்மு - காஷ்மீர் முன்னாள் முதல்வரும், மூத்த தலைவருமான குலாம் நபி ஆசாத், சமீபத்தில் காங்கிர ஸில் இருந்து வெளியேறினார். தனிக் கட்சி துவக்கப் போவதாக அவர் அறிவித்திருந்தார். இந்நிலையில், ஜம்முவில் நேற்று நடந்த பொதுக் கூட்டத்தில் அவர் புதி யக் கட்சியை துவக்குவதாக அறிவித்தார். நிகழ்ச்சியில் அவர் பேசியதாவது:-

ஜம்மு - காஷ்மீர் முதல்வராக, 2005 - 2008 வரை இருந்தேன். இந்த மக்கள் மகிழ்ச்சியுடன் வாழ்வதை உறுதி செய்வதற்கான திட்டங்களை செயல்படுத்த முயன்றேன். ஆனால், கூட்டணியில் இருந்து மக்கள் ஜனநாயகக் கட்சி விலகியதால், முதல்வர் பதவியை இழந்தேன்.ஜம்மு - காஷ்மீர் மக்களுக்காக உழைப் பதற்காக புதிய கட்சியை துவக்க முடிவு செய்துள்ளேன்.

இது, தேசிய அளவிலான கட்சியாக இருக்கும். முதலில் ஜம்மு - காஷ்மீரில் துவக்குகிறேன். சட்ட சபைக்கு அடுத்து நடைபெறும் தேர்தலில் போட்டியிட்டு, மக்கள் சேவையை தொடருவேன்.

ஏற்கனவே பாதியில் நின்ற என் பணிகளை தொடருவேன். இது மக்களுக்கான கட்சி. அதனால் கட்சியின் பெயர், சின்னத்தை மக்களே முடிவு செய்வர். தேசிய அளவில் அனைவரும் சுலபமாக புரிந்து கொள்ளும் வகையில், ஹிந்துஸ்தானி பெயர் வைக் கப்படும்.

சில விரும்பத்தகாத சம்பவங்களால் காங்கிரஸில் இருந்து விலக நேரிட்டது. நம் ரத்தத்தால் உருவானது அந்தக் கட்சி. கம்ப்யூட்டர்களால், சமூக வலைத ளங்களால் அல்ல. ஆனால், தற்போது அவற்றை மட் டுமே கட்சித் தலைமை நம்புகிறது.

கடந்த எட்டு ஆண்டுகளாக காங்கிரஸ் கட்சியின் மோசமான நிலைமையை நாம் பார்த்து வருகிறோம். இந்த எட்டு ஆண்டுகளில் நடந்த, 49 சட்டசபை தேர்தல் களில், 39 இல் காங்கிரஸ் தோல்வி அடைந்தது. தற்போது இரண்டு மாநிலங்களில் மட்டுமே காங்கிரஸ் ஆட்சி உள்ளது. அதையும் இழப்பதற்கு முன், நாம் நம் வீட்டைக் கட்டுவோம்.

அந்த வீடான நம் புதிய கட்சியை செங்கற்களால் கட்டுவோம்; மண்ணால் அல்ல. ஆனால், தேசியக் கட்சியான காங்கிரஸ், தற்போது மண்ணால் கட்டப்பட்டு வருகிறது.

ஜம்மு - காஷ்மீருக்கு மீண்டும் மாநில அந்தஸ்து, நில உரிமை மற்றும் வேலைவாய்ப்புகளில் உள்ளூர் மக்களுக்கே முன்னுரிமை போன்ற உரிமைகளை பெற்றுத் தருவேன். - இவ்வாறு அவர் பேசினார்.

## 'விக்ராந்த்' விமானம் தாங்கிக் கப்பல் தரிக்க சென்னை காட்டுப்பள்ளி துறைமுகம் தெரிவு



விசாகப்பட்டினம் துறைமுகத்தில் இட வசதி இல்லாமையால் 'விக்ராந்த்' கப்பலை சென்னை யில் நிறுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

'விக்ராந்த் விமானம் தாங்கி போர் கப்பலை வேறு துறைமுகத்தில் நிறுத்த ஆலோசிக்கப்பட்டு வந்தது. சென்னை காட்டுப்பள்ளி துறைமுகம் மிகப்பெரிய கப்பல்களை கையாளும் வகையில் ஆழமான அமைப்பை கொண்டது.

கொச்சியில் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட இந்தியாவின் முதல் விமானம் தாங்கி கப்பலான விக்ராந்த் போர் கப்பலை பிரதமர் மோடி நேற்று முன்தினம் நாட்டுக்கு அர்ப்பணித்தார். இந்தக் கப்பல் 18 அடுக்குகளுடன் 262 மீற்றர் நீளத்தில் பிரமாண்டமாக கட்டப்பட்டதாகும். இந்த கப்பலில் 34 போர் விமானங்களை நிறுத்தி வைப்பதற்கு வசதி உள்ளது. அந்த போர் விமானங்கள் ஏறி, இறங்குவதற்காக 2 கால்பந்து மைதானங்கள் அளவுக்கு பிரமாண்டமான ஓடுபாதையும் உள்ளது. விக்ராந்த் போர் கப்பல் ஏற்கனவே கடலில் வெள்ளோட்டம் பார்க்கப்பட்டு தயார் நிலையில் இருந்தது. தற்போது இந்திய கடல் எல்லையின் முக்கிய பாதுகாப்பு அரணாக இந்த கப்பல் மாறி பணியைத் தொடங்கியுள்ளது.

கொச்சி கடற்படை தளத்தில் இருந்து புறப்பட்ட இந்த கப்பல் தற்போது அரபிக்கடல் பகுதியில் இருக்கிறது. அடுத்து அந்த கப்பல் இந்திய பெருங்கடல் பகுதிக்கு செல்லும் என்று தெரிய வந்துள்ளது.

விக்ராந்த் விமானம் தாங்கி கப்பலை விசாகப்பட்டினத்தில் உள்ள கிழக்கு கடற்படை தலைமைப் பகுதியில் நிறுத்தி வைப்பதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் விசாகப்பட்டினம் கடற்படை துறைமுகத்தில் நீளமான விக்ராந்த் போர் கப்பலை நிறுத்துவதற்கு தற்போது போதுமான வசதிகள் இல்லை. அங்கு அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த பணிகள் நிறைவு பெறுவதற்கு இன்னும் சில ஆண்டுகள் தேவைப்படும் என்று தெரியவந்துள்ளது. எனவே அதுவரை விக்ராந்த் விமானம் தாங்கி போர் கப்பலை வேறு துறை முகத்தில் நிறுத்த ஆலோசிக்கப்பட்டு வந்தது. பல்வேறு கட்ட ஆய்வுகளுக்கு பிறகு சென்னை காட்டுப்பள்ளி துறைமுகத்தில் விக்ராந்த் விமானம் தாங்கி போர் கப்பலை நிறுத்துவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. காட்டுப்பள்ளியில் உள்ள துறைமுகம் எல் அன் டி நிர்வாகத்தின் கீழ் உள்ளது. இதனால் அந்த நிர்வாகத்துடன் இந்திய கடற்படை அதிகாரிகள் பேச்சு நடத்தி வந்தனர். அதன்அடிப்படையில்காட்டுப்பள்ளிதுறைமுகத்தில் விக்ராந்த் விமானம் தாங்கிக் கப்பலை நிறுத்து வதற்கு சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஏற்கனவே காட்டுப்பள்ளி துறைமுகம் மிகப்பெரிய கப்பல்களை கையாளும் வகையில் ஆழமான அமைப்பை கொண்டது. இதனால்தான் காட்டுப்பள்ளி துறைமுகத்தை இந்திய கடற்படை அதிகாரிகள் தேர்வு செய்துள்ளனர். சில ஆண்டு களுக்கு இந்த துறைமுகத்தில் விக்ராந்த் விமா னம் தாங்கி போர் கப்பல் நிறுத்தி வைக்கப்படும் என்று கூறப்படுகிறது. இந்தியாவிலேயே போர் கப்பல்களை பழுது பார்ப்பதில் சிறப்பான துறை முகமாக காட்டுப்பள்ளி துறைமுகம் சாதனை படைத்துள்ளது.

சமீபத்தில் கூட அமெரிக்காவின் மிகப்பெரிய போர் கப்பல் இந்த துறைமுகத்தில்தான் பழுது பார்க்க அனுப்பி வைக்கப்பட்டது. இதன்மூலம் மற்ற நாடுகளும் தங்களது போர் கப்பல்களை காட்டுப்பள்ளி துறைமுகத்துக்கு அனுப்பி பழுது பார்க்க பேச்சு வார்த்தை நடத்தி வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.



## கடத்தலில் சிக்கிய செம்மரங்களை ரூ.3,000 கோடிக்கு ஏலம் விட முடிவு

### ஆந்திர மாநில அதிகாரிகள் நடவடிக்கை

ஆந்திராவில் கடத்தல் கும்பலிடம் இருந்து பறிமுதல் செய்யப் பட்ட செம்மரங்களை ரூ. 3 ஆயிரம் கோடிக்கு ஏலம் விட முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஆந்திர மாநில வனத்துறை அதிகாரிகள் ஏலம் விடுவதற்கான ஏற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர். செம்மரங்களுக்கு சீனா, ஜப்பான், தாய்லாந்து, மலேசியா ஆகிய நாடுகளில் பெரும் வரவேற்பு உள்ளது.

ஆந்திராவில் கடத்தல்காரர்களிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட செம்மரக்கட்டைகள் திருப்பதி, கடப்பா ஆகிய இடங்களில் உள்ள கிடங்குகளில் வைக்கப்பட்டுள்ளன.

இவற்றில் மொத்தம் 5,700 டன் செம்மரக்கட்டைகள் உள்ளன. இதில் 2,640 டன் செம்மரங்களை வரும் அக்டோபர் முதல் 2023 ஆண்டு மார்ச் வரை பல்வேறு கட்டங்களாக ஏலம் விட முடிவு செய்துள்ளனர். இந்த ஏலத்துக்கு மத்திய அரசு அனு மதி அளித்துள்ளது. இதையடுத்து, ஆந்திர மாநில வனத்துறை அதிகாரிகள் ஏலம் விடுவதற்கான ஏற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர். இதன் மூலம் அரசுக்கு 3,000 கோடி ரூபா கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஏற்கனவே, 2014-2018 ஆம் ஆண்டு வரை 1,251 டன் செம்மரக்கட்டைகள் ஏலம் விடப்பட்டது. இதன் மூலம், 7,505 கோடி ரூபா வருவாய் கிடைத்தது. இந்த செம்மரங்களுக்கு சீனா, ஜப்பான், தாய்லாந்து, மலேசியா ஆகிய நாடுகளில் பெரும் வரவேற்பு உள்ளது.

# பெண் இலக்கிய ஆளுமைகளின் ஒன்றுகூடல் திருகோணமலையில்



(பைசல் இஸ்மாயில்)

திருகோணமலை மாவட்ட பெண் இலக்கிய ஆளுமைகளை ஒருங்கிணைத்து கலைத்துறைசார் வாண்மையை மேலும் முன்னோக்கி நகர்த்தும் நோக்கில் ஒரு பொழுதில் ஒன்று கூடுவோம் எனும் தொனிப்பொருளில் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட திருகோணமலை மாவட்ட பெண் எழுத்தாளர்கள் ஆளுமைகளின் ஒன்றுகூடல் நேற்று முன்தினம் மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் (திருமதி) சரண்யா சுதர்னின் தலைமையில் இடம்பெற்ற இந்த ஒன்றுகூடல் நிகழ்வில் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் (திருமதி) ஜே.ஜே.முரளிதரன் பிரதம அதிதியாக கலந்துகொண்டு சிறப்பித்தார்.

இந்தஒன்றுகூடலின்வளவாளர்களாக,தம்பலகாமம் பிரதேச செயலாளர் (திருமதி) ஜெயகௌரி ஸ்ரீபதி, திருகோணமலை மெதடிஸ்த மகளிர் கல்லூரியின் அதிபர் (திருமதி) சுபத்திரா ஜோன் தேவதாஸ், திருகோணமலை புனித மரியாள் கல்லூரியின் அதிபர் அருட் சகோதரி நிரோ, முன்பள்ளி அதிபர் அரூ ஜெயராஜா, சட்டத்தரணி (திருமதி) ஐஸ்வர்யா சிவகுமார், பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஓய்வுபெற்ற மாகாணப் பணிப்பாளர் (திருமதி) என்.ஸ்ரீதேவி, கிழக்கு பல்கலைக்கழக நூலகர் (திருமதி) பானு சுதாகரன், சுதந்திர ஊடகவியலாளர் கல்யாணி நவரெத்தினம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போது, தற்கால இடர் மிகுந்த சூழலை எதிர்கொள்வதில் பெண்களின் பங்களிப்பு, பெண்களும் சட்டமும், பெண் ஆளுமையும் இன்றைய நிலையும், நிர்வாகத்தில் பெண்கள் எதிர்நோக்கும் சவால்கள், பெண்களும் நிர்வாக ஆற்றலும், பேசுர சமூக பண்பாடும் தற்காலத்தின் சவால்களும், பெண் தலைமைத்துவ குடும்பமும் தற்காலத்தில் அவர்கள் எதிர்நோக்கும் சவால்களும், பெண்களும் அரசியலும் அரங்கும் பெண்களும், தற்கால கல்வி முறைமையில் பெண்கள் எதிர்நோக்கும் சவால்கள், முன்பள்ளி ஆசிரியர்கள் சமூகத்தில் எதிர்கொள்ளும் சவால்கள் என்ற தலைப்புக்களில் பல்வேறுபட்ட முக்கிய விடயங்கள் பேசப்பட்டன. பாடல், வயலின் இசை, கவிதை, நாடகம், கூத்து போன்ற நிகழ்வுகளும் பெண்களினால் நிகழ்த்தப்பட்டன. இந்த ஒன்றுகூடலில் கலந்துகொண்ட திருகோணமலை மாவட்ட பெண் இலக்கிய ஆளுமைகளை கௌரவித்து அவர்களுக்கான சான்றிதழ் மற்றும் திணைக்களத்தினால் வெளியீடு செய்யப்பட்ட 100 சிறுகதை அடங்கிய நூல்களையும் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் (திருமதி) சரண்யா சுதர்சனினால் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கர்ப்பிணித் தாய்களுக்கு உதவிகள் வழங்கி வைப்பு



(நூருள் ஹுதா உமர்)

இறக்காமம் பிரதேச செயலக பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்திப் பிரிவின் 'கரம் கொடுப்போம்' நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சேவை நாடிகளுக்கு பல்வேறு உதவிகள் வழங்கிவைக்கப்பட்டு வருகின்றன.

'கரம் கொடுப்போம்' வேலைத்திட்டமானது, தன்னார்வ தனவந்தவர்களின் நிதிப் பங்களிப்போடு பிரதேச செயலக பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்திப் பிரிவினால் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது.

பிரசவத்திற்கு தேவையான பொருள்களும் மருத்துவச் செலவுக்கான காசோலையும் இறக்காமம் உதவி பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. அஹமட் நஸீல் தலைமையில் வழங்கி வைக்கப்பட்டன.

'பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்திப் பிரிவின் ஊடாக நடைமுறைப் படுத்தப்படும் இந்த கரம் கொடுப்போம் நிகழ்வில் பிரிவில் கடமைபுரியும் உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.





# சிறுவர்களின் மேம்பாட்டுக்காக காத்தான்குடியில் சிறுவர் சந்தை



(நூருள் ஹுதா உமர்)

சிறுவர்களின் ஊக்குவிப்புக்காகவும் மேம்பாட்டுக்காகவும் காத்தான்குடி நகரசபை யின் மொடல் பாலர் பாடசாலை ஆசிரியர்களின் வழிகாட்டலில் பாலர்களும் பெற்றோர்களும் இணைந்து ஏற்பாடு செய்த Kids Mart சிறுவர் சந்தை காத்தான்குடி ஹிஸ்புல்லாஹ் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. இந் நிகழ்வின் பிரதம அதிதியாக முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் கலந்து கொண்டார். விசேட அதிதிகளாக காத் தான்குடி நகர முதல்வர் எஸ்.எச்.எம். அஸ்பர், நகர சபை செயலாளர் எம்.ஆர். பாத்திமா றிப்கா பீன் மற்றும் நகர சபை உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், ஊர் பிரமுகர்கள் என பலரும் கலந்து கொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர்.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# 6 மாத காலத்துக்கு மாத்திரமே ரணில் அரசு பதவியில் இருக்கும்



## வாசுதேவ நாணயக்கார ஆரூடம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் இன்னும் ஆறு மாத காலத்துக்கு மாத்திரமே பதவியில் இருக்கும். ஆளும் தரப்பின் ஒருசிலர் தமது குறுகிய தேவைக்காக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை மீண்டும் அரசியலுக்கு கொண்டு வர முயற்சிக்கிறார்கள் என இடதுசாரி ஜனநாயக முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

இலங்கை கம்யூனிச கட்சியின் காரியாலயத்தில் இடம்பெற்ற அரசியல் கட்சி தலைவர்களுடனான சந்திப்பை தொடர்ந்து ஊடகங்களுக்குக் கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

பொருளாதார நெருக்கடிக்கான கொள்கை திட்டத்தை ஜனாதிபதி இதுவரை முன்வைக்கவில்லை. சர்வதேச நாணய நிதியம் நிபந்தனை அடிப்படையில் 200 கோடியே 90 லட்சம் ரூபா நிதியை வழங்க சர்வதேச நிதியம் இணக்கம் வழங்கியுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் கடுமையான நிபந்தனைகளை அமுல்படுத்தும் போது நடுத்தர மக்கள் மிக மோசமான நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடும். நாணய நிதியத்தின் நிபந்தனைக்கமையவே மின்சாரம் மற்றும் நீர் விநியோக கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் நாள்களில் மேலும் சில சேவைகளின் கட்டணம் அதிகரிக்கப்படும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் இன்னும் 06 மாத காலத்துக்கு மாத்திரம் பதவியில் இருக்கும். மக்களின் ஆதரவு இல்லாமல் எப்பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியாது. தமக்கான அரசாங்கத்தை தெரிவு செய்துகொள்ள நாட்டு மக்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட வேண்டும்.

ஆளும் தரப்பின் ஒருசிலர் தமது குறுகிய தேவைகளுக்காக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை மீண்டும் அரசியலுக்கு கொண்டு வர முயற்சிக்கிறார்கள். தவறான ஆலோசனைகளே அவரது நிர்வாகத்தை முழுமையாகப் பலவீனப்படுத்தியது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிற்கு மக்களாணை உண்டு என பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் குறிப்பிடுகின்றமை நகைப்புக்குரியது. மக்களாணை உள்ளதாக குறிப்பிட்டுக்கொள்ளும் தரப்பினர் உள்ளூராட்சிமன்ற தேர்தலை பிற்போட அழுத்தம் பிரயோகிக்கிறார்கள். – என்றார்.

# வசந்த முதலிகே, சிறிதம்ம தேரர், ஹாந்தவை விடுவிக்க வலியுறுத்தி 8 ஆம் திகதி ஆர்ப்பாட்டம்

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே, கல்வெள சிறிதம்ம தேரர் மற்றும் ஹாந்த ஜீவந்த குணத்திலக்க ஆகிய மூவரும், சி.ரி.ஐ.டி. எனப்படும் பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவின் பொறுப்பில் உள்ள தங்காலை, தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வரும் நிலையில் அவர்களின் விடுதலையை வலியுறுத்தி பாரிய போராட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் பிரசன்ன அல்விஸ், இது தொடர்பில் எழுத்து மூலம் உறுதிப் படுத்தியுள்ளார்.

அனைத்து பல்கலைக்கழக பிக்குகள் ஒன்றியம் இந்த ஆர்ப்பாட்டத்துக்கான ஏற்பாடுகளை முன்னெடுத்துள்ளதுடன் எதிர்வரும் 8 ஆம் திகதி வியாழனன்று இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

நாட்டில் ஜனாதிபதி பதவி மாற்றத்தை ஏற்படுத்திய மக்கள் போராட்டத்தின் முன்னணி செயற்பாட்டாளர்களாக விளங்கிய அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே, கல்வெள சிறிதம்ம தேரர் மற்றும் ஹாந்த ஜீவந்த குணத்திலக்க ஆகிய மூவரையும் பயங்கரவாதத் தடை சட்டத்தின் கீழ் 90 நாள்கள் தடுப்புக் காவலில் வைத்து விசாரிக்க அனுமதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் வழங்கப்பட்டது.

அதன்படி, அரசுக்கு எதிரான சதிகள் ஏதும் இடம்பெற்றுள்ளனவா என சி.ஐ.டி. எனும் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் மற்றும் சி.ரி.ஐ.டி. எனப்படும் பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப்பிரிவு ஆகியவற்றுக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபரின் கீழ் இணைந்த பொலிஸ்சிறப்புக்குழுவொன்றுவிசாரணைகளை முன்னெடுக்கிறது. இந்த விசாரணையும், கைது மற்றும் தடுப்புக் காவலும் அடக்குமுறையின் உச்சக் கட்டம் என ஆர்ப்பாட்டக்காரர்கள் சார்பில் தெரிவிக் கப்ப டுகின்றது. இந் நிலையில் கைது மற்றும் தடுப்புக் காவலுக்கு எதிராக உயர் நீதி மன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுவும் தாக்கல் செய்யப் பட்டுள்ளது.

அவ்வாறான பின்னணியிலேயே, இந்த மூவரையும் விடுவிக்க வலியுறுத்தி பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்று திட்டமிடப்பட்டுள்ளது.



# துருக்கியில் இருந்து இறக்குமதி மா விலை குறையும் சாத்தியம்!

துருக்கியில் இருந்து இறக்குமதி செய்யப்படும் தேவையான கையிருப்பு மா, மாத இறுதிக்குள் வந்து இங்கு விநியோகம் செய்யப்பட்டவுடன் கோதுமை மாவின் விலை குறைக்கப்படலாம் என மொத்த இறக்குமதியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யும் போது ஏற்பட்டுள்ள சிக்கல்கள் காரணமாக துருக்கியில் இருந்து மாவை இறக்குமதி செய்வது தொடர்பாக இலங்கை பரிசீலித்து வருவதாக அத்தியாவசிய உணவு இறக்குமதியாளர்கள் மற்றும் வர்த்தகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதன்படி செப்ரெம்பர் நடுப்பகுதியில் ஒருதொகை கோதுமை மா, துருக்கியில் இருந்து இறக்குமதி செய்யப்படும் என்றும் அதற்கான நடவடிக்கையில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர் எனவும் அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது.

டுபாயிலிருந்தும் இறக்குமதி செய்யப்படும் கோதுமை மாவின் விலை அதிகம் என்பதால் துருக்கியில் இருந்து கோதுமை மா இறக்குமதி தொடங்கியதும், மாவின் விலை படிப்படியாக குறையும் என எதிர்பார்ப்பதாக அதன் பேச்சாளர் கூறியுள்ளார்.

இந்தியாவின் ஏற்றுமதி தடை மற்றும் உள்ளூர் கோதுமை மா இறக்குமதியாளர்கள் போதியளவு கையிருப்புகளை சந்தைக்கு வெளியிடத் தவறியமையால் தட்டுப்பாடு அதிகரித்து வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.



# மன்னாரில் இடம்பெற்ற சதுரங்கப் போட்டி

மன்னார் மாவட்ட சதுரங்க சங்கத்தின் ஏற்பாட்டில் மாவட்டத்தின் முதல் முறையாக சதுரங்க போட்டி மன்னார் சித்தி விநாயகர் இந்து தேசிய பாடசாலையில் நேற்று (சனிக்கிழமை) நடைபெற்றது.

உலக சதுரங்க சம்மேளனத்தின் நிறுவுநரின் வழிகாட்டலில் மாவட்ட சதுரங்க சங்கத்தின் தலைவர் றொகான் தலைமையில் இந்தப் போட்டி இடம்பெற்றது. மேற்படி போட்டி 15 வயதுக்கு மேல் பிரிவுகளுக்கு இடம் பெற்றதோடு 100 போட்டியாளர்கள் பங்கு பெற்றினர்.

மேலும் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பதக்கங்கள், கேடயங்கள் மற்றும் சான்றிதழ்கள் கலந்து கொண்ட அதிதிகளால் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.